1994 நவம்பர் 8]

49—

வீராணம் ஏரியைத் தூர்வாரி ஆழப்படுத்துதல்

23155—செல்வி கோ. மல்லிகா:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீராணம் ஏரியைத் தூர்வாரி ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தற்போது சென்னை நகரின் குடிநீர் வசதிக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய வீராணம் திட்டத்தின் கீழ் வடவாறு வீராணம் ஏரியில் உட்புகும் இடத்தில் இருந்து காணப்படும், மணல் மேட்டில் ஒரு பகுதியை தூர்வாரவும் வீராணம் ஏரியினுள்ளே உள்ள தொட்டி வாய்க்காலை அகலப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் ஏரியின் முழு கொள்ளளவு மட்டத்தை இரண்டடி உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்தினால் ஏரியின் கொள்ளளவு மேலும் 535 மில்லியன் கன அடி அதிகரிக்கும்.

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வானம் பொழியுது வளம் கொழிக்குது எங்கள் இதயதெய்வம் புரட்சித் தலைவி ஆட்சியில் எனத் தமிழக மக்கள் மகிழ்ச்சியோடு இருக்கின்ற இந்த நல்ல நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில் கண்ணிமைக்கும் நேரத்தில் காரியம் ஆற்றிடும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் பதிலுரைக்கு எனது நன்றியை காணிக்கையாக்கி, சென்னை மாநகர மக்களின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்ய வீராணம் திட்டத்தைச் செயலாக்கும் அதேநேரத்தில் விவசாயப் பெருங்குடி மக்களின் நலனையும் கருத்தில் கொண்டு, வீராணம் ஏரியை தூர் எடுக்கிற திட்டத்தின் தொடர்பாக வடவாற்றை அபிவிருத்தி செய்யவும், வீராணம் ஏரிக்கரைகளை உயர்த்தவும், பலப்படுத்தவும், நீர்மட்டத்தை உயர்த்தவும், கொள்ளளவை

கூடுதலாக்கவும், விவசாயிகளின் நலன் பாதுகாக்கப்படவும் வழிவகைககளைச் செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய வீராணம் திட்டத்திற்காக ஏற்கெனவே 60 கோடி ரூபாய்க்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இதிலே வடவாறு கால்வாயை அகலப்படுத்துகின்ற பணி, சீரமைக்கின்ற பணி போன்றவை உள்ளடங்கும். அது தவிர வரத்துக் கால்வாய்களைச் சீரமைக்கின்ற பணியும் அதிலே சேரும். அதுபோக கரையினை உயர்த்தி கொள்ளளவை அதிகப்படுத்துதல், உள்ளே இருக்கின்ற காட்டாமணக்குச் செடிகளை எல்லாம் அகற்றுதல் இதுபோன்ற பல்வேறு பணிகளுக்காக ஏறக்குறைய 60 கோடி ரூபாயிலே மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, சென்னைக்குக் குடிநீர் கொண்டு வந்தாலும்கூட, கொள்ளளவு பாதிக்கப்படக் கூடாது என்றும், அங்கே இருக்கின்ற விவசாயிகளுடைய நிலைமையைக் கருத்தில் கொண்டும் கரையினுடைய அளவை உயர்த்தி விவசாயத்திற்கும் தண்ணீர் கொடுக்க வேண்டும், அதே நேரத்தில் சென்னை நகரத்திற்கும் தண்ணீர் கொண்டு வருவதற்கு வசதியாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலே தொழில்நுட்ப ரீதியாக திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பணிகள் துவங்குவதற்கான ஆயத்த வேலைகள் நடைபெறுகின்றன. இதைக் கவனித்துக்கொள்வதற்காக காட்டுமன்னார்கோவிலில் புதிய வீராணம் திட்டக் கோட்டம், டிவிஷன் ஒன்று புதியதாக உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அரசு வீராணம் ஏரியை–நீண்டநாட்களாக பராமரிக்கப்பட வேண்டிய அந்த ஏரியை புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலேதான் அதை எடுத்துச் செய்வதற்கான பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கான செயல்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீராணம் திட்டத்தில், வீராணம் ஏரி ஆயக்கட்டுகளுக்குப் பாசனம் அளிக்கும் 34 வாய்க்கால்கள் அபிவிருத்தியையும் கருத்தில் கொண்டு, எல்லா வாய்க்கால்களையும் தூர் எடுத்து சிமெண்ட் பலகைகளால் லைனிங் செய்தால், வீராணம் ஆயக்கட்டின் கடைமடைப் பகுதிவரை தங்குதடையின்றி தண்ணீர்ப் பற்றாக்குறை காலத்திலும் பாசனம் பெற வசதி ஏற்படும் என்பதால், பொதுப் பணித் துறை பராமரிப்பிலுள்ள 5 வாய்க்கால்களோடு மீதமுள்ள 29 ரெவின்யூ வாய்க்கால்களையும் பொதுப் பணித்துறை வாய்க்கால்களாக மாற்றி

1994 நவம்பர் 8]

நல்ல நிலையில் பராமரிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வீராணம் ஏரியில் இருக்கின்ற வாய்க்கால்கள் வருவாய்த் துறையின் சார்பாகவும், பொதுப் பணித் துறையின் சார்பாகவும் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதை அரசு அறிந்திருக்கிறது. ஆகவே, அதுசம்பந்தமாக வருவாய்த்துறை அதிகாரிகளோடு கலந்து பேசி உரிய நடவடிக்கையை பொதுப் பணித்துறை அதிகாரிகள் எடுப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு.வி.கே. சின்னசாமி.

திரு. வி.கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். வீராணம் ஏரித் திட்டம் என்பது சென்னைக்குக் குடிநீர் கொண்டுவருவதற்காக ஏற்கெனவே உருவாக்கப்பட்ட திட்டம். ஆனால் இப்பொழுது அது மண் நிரம்பி தண்ணீரின் கொள்ளளவு மிகக் குறைந்திருக்கிறது. நான் ஏற்கெனவே குடிநீர்த் திட்டத்திற்காக நேரில் பார்வையிடச் சென்ற நேரத்தில், ஒரு சில விவசாயிகள் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள், அங்கிருந்து தண்ணீர் எடுத்துச் சென்றால், எங்களுக்கு குறைந்துவிடுமோ என்ற அச்சத்தைத் தெரிவித்தார்கள். ஆனால் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கருத்தின்படி அந்த ஏரியை தூர் வாருவதால் அந்த விவசாயிகளுக்கு எந்த பாதிப்பும் வராது என்பதைத் திட்டவட்டமாக இந்தச் சபையின் மூலமாக அறிவித்தால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே, அந்த ஏரியின் ஆழம் எவ்வளவு, இதனால் எவ்வளவு தண்ணீர் கூடுதலாகத் தேக்க முடியும் என்பதையும், இந்தத் திட்டம் இப்பொழுது எந்த நிலையில் உள்ளது என்பதையும் அமைச்சர் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-30*

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைவராக இருக்கின்ற காரணத்தால் பல்வேறு துணைக் கேள்விகளை இங்கே வைத்திருக்கிறார்கள். தற்போது உள்ள கொள்ளளவு *930* மில்லியன் கன அடிதான். நாம் அந்த வீராணம் ஏரிக்கரையை உயர்த்துகிறபோது அதனுடைய கொள்ளளவு

[*1994 நவம்பர் 8*

535 மில்லியன் கன அடி அதிகரித்து அதனுடைய மொத்த கொள்ளளவு 1465 மில்லியன் கன அடியாக உயர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்ன பதிலில் தெரிவித்தேன். அந்த ஏரியை ஆழப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அதற்குத் தண்ணீர் தருகின்ற வடவாறு கால்வாயையும் அகலப்படுத்துவதற்காக 22 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டம் இருக்கிறது. இப்படி வரத்துக் கால்வாய்களைச் சீரமைத்தல், கேச்மென்ட் ஏரியா என்று சொல்லப்படுகிற நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் இருக்கின்ற என்க்ரோச்மென்ட் என்று சொல்லப்படுகின்ற ஆக்கிரமிப்புகளை எல்லாம் அகற்றுதல், காட்டாமணக்குச் செடிகளை அகற்றுதல் இதுபோன்ற பல பணிகளை உள்ளடக்கி இருக்கிறது புதிய வீராணம் திட்டம். அதைக் கருத்தில் கொண்டுதான் இதுபோன்ற பணிகளை நிறைவேற்ற வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்கான ஆய்வுகளும் நடைபெற்று இன்றைக்கு செயல்படுத்துவதற்காக புதிய கோட்டத்தையே அங்கே உருவாக்கி இருக்கிறோம். ஏற்கெனவே விவசாயிகளிடத்தில் நாங்கள் பேசி இருக்கிறோம். நானும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் இது சம்பந்தமாக அந்தப் பகுதிக்கே சென்று வீராணம் ஏரியைப் பார்வையிட்டு, இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர் திரு. அழகிரி போன்றவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் போன்றவர்களும், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் அந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாயிகளை எல்லாம் அழைத்துப் பேசி இந்தத் திட்டத்தில் எந்தவிதமான குறைபாடும் இல்லை; உங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதில் தகராறு இருக்காது; எந்தவிதமான குறைபாடும் இருக்காது என்று அவர்களிடத்தில் தெளிவுபடுத்தி, கொள்ளளவை அதிகரிக்கிற காரணத்தால் ஏரிக்கு நன்மை ஏற்படும் என்பதை எல்லாம் சொல்லி அவர்களும் ஒத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே வேறு யாராவது விவரம் தெரியாதவர்கள் சொல்லி இருக்கலாம். அரசு தெளிவாகச் சொல்லி இருக்கிறது, குடிநீரை இங்கே கொண்டுவந்தாலும்கூட அங்கே இருக்கிற ஆயக்கட்டுதாரர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல் தண்ணீர் வழங்கப்படும் என்ற உறுதியை வழங்கி இருக்கிறோம். அந்த உறுதி இன்றைக்கும் இருக்கிறது. ஆகவே அதில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. எனவே விவசாயிகள் நலனும் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ளப்படும். சென்னைக்கு குடி தண்ணீர் கொண்டு வருவதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காகத்தான் இப்படி திட்டங்களைத் தீட்டி இருக்கிறோம்.